**செய்தி வெளியீடு எண்: 359** **நாள்: 05.06.2018**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.6.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வனத்துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், எம்.ஆர். பாளையத்தில் 1 கோடியே 5 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன வன மர விதை மையம், ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வேட்டைத்தடுப்பு முகாம் கட்டடம் மற்றும் வனக்காப்பாளர்கள் மற்றும் வனக்காவலர்கள் குடியிருப்பு ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 11.8.2016 அன்று சட்டப்பேரவை விதி எண் 110 கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ‘‘தமிழ்நாட்டின் மத்தியப் பகுதிகள் மற்றும் டெல்டா மாவட்டங்களுக்கு மரபியல் தரம் வாய்ந்த மற்றும் உயர்தர மர விதைகள் வழங்கும் அவசியத்தினை கருத்தில் கொண்டு, திருச்சியில் நவீன ‘‘வன மர விதை மையம்‘‘ ஏற்படுத்தப்படும்’’ என்று அறிவித்தார்கள்.

அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், எம்.ஆர். பாளையத்தில் 1 கோடியே 5 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன வன மர விதை மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்த மையமானது, விதை சேகரம், ஆய்வு, தரப்படுத்துதல், குளிர்ந்த அறைகளில் விதைகளை சேமித்தல் மற்றும் வழங்குதலுக்கான நவீன தொழில் வசதிகளை கொண்டுள்ளது. மேலும், இம்மையத்தில், விதை சேமிப்பு கிடங்கு, விதை உலர்த்தும் கலன், ஆய்வுக்கூடம் மற்றும் வளர்ப்பு கூடம், விதை தரம் பிரிக்கும் இயந்திரம், விதை பரிசோதனை இயந்திரம், கூட்ட அரங்கம் மற்றும் அலுவலகக் கட்டடம் ஆகிய வசதிகளையும் உள்ளடக்கி உள்ளது.

இந்த மையம், தொழிற்சாலைகள், இதர துறைகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு மரபியல் மேம்படுத்தப்பட்ட, உயர் ரக, சீர்திருத்தப்பட்ட விதைகளை வழங்குவதோடு, அரிய, அருகி வருகின்ற மற்றும் அழிந்து வருகின்ற மரம் மற்றும் மருத்துவச் செடிகளின் தேவையினை பூர்த்தி செய்யும் மையமாகவும் விளங்கும்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில், 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வேட்டைத்தடுப்பு முகாம் கட்டடம், ஒருங்கிணைந்த வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் குடியிருப்பு, வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் குடியிருப்பு ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் பணியாற்றும் களப்பணியாளர்கள் மற்றும் வண்டலூர் – அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் அமைந்துள்ள உயர்நிலை வன உயிரின பாதுகாப்பு நிறுவனத்தில் (ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கல்வி) பணியாற்றும் களப்பணியாளர்களின் பயன்பாட்டிற்காக 1 கோடியே 10 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 8 ஜீப்புகள், வன விலங்களுக்கான ஆம்புலன்ஸ், ஊழியர்களை ஏற்றி செல்லும் பேருந்து, மிருகங்களை ஏற்றி செல்லும் வாகனம் தலா ஒன்று, என மொத்தம் 11 வாகனங்களை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 5 ஓட்டுநர்களுக்கு அவ்வாகனங்களுக்கான சாவிகளை வழங்கினார்கள்.

சாலைகளை அகலப்படுத்துதல், குழாய்கள் பதித்தல் போன்ற கட்டமைப்பு பணிகளுக்காக பொதுவாக மரங்கள் வெட்டப்பட்டு அகற்றப்படுகின்றன. மரங்களின் அவசியத்தை கருத்தில் கொண்டு, மரங்களை வெட்டாமல், மரத்தை வேருடன் பிடுங்கி மாற்றி நடவு செய்யும் வகையில், மாநில வன ஆராய்ச்சி நிறுவனத்தின் பயன்பாட்டிற்காக 50 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட வாகன இயந்திரம் (Bobcat Tree Transplantation Machine), மாநில வன ஆராய்ச்சி நிறுவனத்தில் கிடைக்கும் உயிரி கழிவுகளான உடைந்த மரக்கிளைகள், சுள்ளிகள், காய்ந்த இலைகள் ஆகியவற்றை தூளாக்கி, மண்புழு உரம் தயாரிக்கும் வகையில் 1 லட்சத்து 50 ஆயிரம் செலவில் வாங்கப்பட்ட மண்புழு உரம் தயாரிக்கும் இயந்திரம் (Power operated Shredder) மற்றும் 10 லட்சம் ரூபாய் செலவிலான இழுவை இணைப்பு வண்டியுடன் கூடிய டிராக்டருடன் இயங்கும் மண்புழு உரம் தயாரிக்கும் இயந்திரம் (Tractor operated Shredder cum Pulverizer) ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வனத்துறையின் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி. கருப்பணன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) திரு.ஆர்.கே. உபாத்யாய், இ.வ.ப., தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர் செயலர் திரு.டி.சேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 5.6.2018